# ஆண்டுப் பொதுத் தேர்வு - மார்ச் - 2023

## 11 - ஆம் கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு ( TENTATIVE )

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் | 1 | அ | அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை |
| 2 | அ | ஆண்டுதோறும் குறையும் | 2 | ஈ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 3 | ஈ | இயந்திரம் | 3 | ஆ | மேலெழுதுதல் |
| 4 | ஈ | அச்சுப்பொறி | 4 | ஆ | விதிப்பிழைகள் |
| 5 | இ | புலனாகாச் சொத்து | 5 | அ | இருப்பு நிலைக் குறிப்பு |
| 6 | அ | வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி | 6 | அ | அனாமத்து கணக்கு |
| 7 | இ | வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது | 7 | அ | நடப்பு காலத்திற்கு |
| 8 | இ | துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் | 8 | அ | ஆண்டுதோறும் குறையும் |
| 9 | ஆ | சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல் | 9 | இ | ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய |
| 10 | இ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் | 10 | அ | வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி |
| 11 | ஈ | லூகா பாசியோலி | 11 | இ | முதலினை |
| 12 | அ | இருப்பு நிலைக் குறிப்பு | 12 | இ | வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது |
| 13 | ஆ | விதிப்பிழைகள் | 13 | இ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் |
| 14 | இ | முதலினை | 14 | அ | இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் |
| 15 | அ | அனாமத்து கணக்கு | 15 | இ | துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் |
| 16 | அ | இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் | 16 | ஈ | இயந்திரம் |
| 17 | இ | ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய | 17 | ஈ | அச்சுப்பொறி |
| 18 | அ | நடப்பு காலத்திற்கு | 18 | இ | புலனாகாச் சொத்து |
| 19 | ஆ | மேலெழுதுதல் | 19 | ஆ | சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல் |
| 20 | அ | அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை | 20 | ஈ | லூகா பாசியோலி |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

**21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?**

- உரிமையாளர்கள், நிர்வாகம், பணியாளர்கள் , முதலீடாளர்கள், வாடிக்கையாளர்கள், கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள் , பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம்

**22. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறு குறிப்பு வரைக**

- இது ஒரு அடிப்படை கருத்து.
- இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்டகாலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.
- இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின்மீதான தேய்மானம், கொடுபடவேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல்

**23. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

**24. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக**

i) வெளித்தூக்குக் கூலி - பற்று
ii) விற்பனை - வரவு
iii) முதலீடுகள் - பற்று
iv) வாராக்கடன் - பற்று

**25. உரிய குறிப்பேடு என்றால் என்ன?**

- துணை ஏடுகளான ரொக்க ஏடு, கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு, விற்பனைத் திருப்ப ஏடு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு போன்ற ஏடுகளில் பதிய முடியாத எஞ்சிய பதிவுகளை பதிவு செய்யும் ஏடு உரிய குறிப்பேடு எனப்படுகின்றன.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

26. **சில்லறை ரொக்க ஏடு - சிறு குறிப்பு வரைக**

- சில்லறை ரொக்க ஏடு என்பது, அடிக்கடி நிகழக்கூடிய சிறு செலவினங்களான வண்டிச் சத்தம், கூலி, தபால் தந்தி செலவு, அச்சு, எழுதுபொருள் செலவு போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடாகும்.
- இதற்கென தனியாக அமர்த்தப்படும் சில்லறைக் காசாளர், சில்லறை ரொக்க ஏட்டினைப் பராமரிக்கிறார்.

27.

i) விற்பனை கணக்கில் ₹. 100 **வரவு** வைக்க வேண்டும்

ii) கொள்முதல் கணக்கில் ₹. 400 **வரவு** வைக்க வேண்டும்.

iii) கொள்முதல் திருப்ப கணக்கில் ₹. 600 **பற்று** வைக்க வேண்டும்

iv) விற்பனைத் திருப்பக் கணக்கில் ₹. 700 **பற்று** வைக்க வேண்டும்

28.

1) ஆண்டு தேய்மானத் தொகை $= \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை – எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$

$= \frac{10{,}000 - 2{,}000}{10} = \frac{8{,}000}{10}$

ஆண்டு தேய்மானத் தொகை = ₹. 800

2) தேய்மான விகிதம் $= \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$= \frac{800}{10{,}000} \times 100 = 8\%$

29. **கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?**

- கணினிமயக் கணக்கியல் முறை என்பது, கணினியைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிக்கும் முறை ஆகும்.

30. **விளக்க குறிப்பு** :

i) **பங்காதாயம் வங்கியால் நேரடியாக பெறப்பட்டது**

ii) **சொந்த பயனுக்காக சரக்குகள் எடுத்தது / சொந்த பயன்பாட்டிற்கு எடுத்தது**

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

1. **கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக. ( ஏதேனும் 3 )**

1) **முறையானபதிவேடுகள்**

- அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

2) **நிதிநிலைஅறிக்கைகள் தயாரித்தல்**

- வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் ,வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.
- இது உரிமையாளர்களுக்கு இலாபத்தை வழங்கவும், வணிகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியை அளிக்கவும் உதவுகிறது.

3) **வளர்ச்சியை மதிப்பிடல்**

- வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.

4) **முடிவெடுக்க உதவுதல்**

- நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான, உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.
- அந்தத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிர்வாகம் உருவாக்குகிறது.

5) **பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்**

- உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள், வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

6) **சட்டச் சான்றாக இருத்தல்**

- பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

7) **வரி கணக்கிடுதல்**

- வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன.

8 ) **சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

- சட்டப்பூர்வத் தேவைகளான பணியாளர் வருங்கால வைப்புநிதி பராமரிப்பு, தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுப் பங்களிப்பு, வருமானவரிப் பிடித்தம் மற்றும் வரி அறிக்கைகள் தாக்கல் செய்தல் போன்றவை கணக்கியல் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- சட்டத் தேவைகளின்படி கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கவும் உதவுகிறது.

9) **இணைப்பின்போது தீர்வு செய்தல்**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களை இணைக்கும் போது, இணைப்பு நிபந்தனைகளை ஏற்படுத்துவதற்கும் இணைப்பின் விளைவாக செலுத்தவேண்டிய ஈடுசெய் தொகையை முடிவு செய்வதற்கும் தேவையான தகவல்களைக் கணக்கேடுகள் அளிக்கின்றன.

32. **'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' – விவரி.**

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்ய முடிகிறது.

33. பின்வருவனவற்றை ஆள்சார்கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| 1 | முதல் | ஆள்சார் கணக்கு |
| 2 | கட்டடம் | சொத்து கணக்கு |
| 3 | உள் ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| 4 | ரொக்கம் | சொத்து கணக்கு |
| 5 | கழிவு பெற்றது | பெயரளவு கணக்கு |
| 6 | வங்கி | ஆள்சார் கணக்கு |

34.

## பேரேட்டுக் கணக்குகள்

ப **ரொக்க கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | முதல் க/கு | | 1,00,000 | 2017 ஏப் 30 | இருப்பு கீ/ இ | | 1,00,000 |
| | | | 1,00,000 | | | | 1,00,000 |
| 2017 மே 1 | இருப்புகீ/கொ | | 1,00,000 | | | | |

ப **சரக்கிருப்பு கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | முதல் க/கு | | 40,000 | 2017 ஏப் 30 | ரொக்க க/கு | | 40,000 |
| | | | 40,000 | | | | 40,000 |
| 2017 மே 1 | இருப்புகீ/கொ | | 40,000 | | | | |



ப **கடனாளிகள் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | முதல் க/கு | | 10,000 | 2017 ஏப் 30 | இருப்பு கீ/ இ | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| 2017 மே 1 | இருப்புகீ/கொ | | 10,000 | | | | |

ப **அறைகலன் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | முதல் க/கு | | 10,000 | 2017 ஏப் 30 | இருப்பு கீ/ இ | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| 2017 மே 1 | இருப்புகீ/கொ | | 10,000 | | | | |

ப **கடனீந்தோர் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 30 | இருப்பு கீ/இ | | 40,000 | 2017 ஏப் 1 | பற்பல சொத்துகள் க/கு | | 40,000 |
| | | | 40,000 | | | | 40,000 |
| | | | | மே 1 | இருப்பு கீ/ கொ | | 40,000 |

ப **குமரன் முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 30 | இருப்பு கீ/இ | | 1,20,000 | 2017 ஏப் 1 | பற்பல சொத்துகள் க/கு | | 1,20,000 |
| | | | 1,20,000 | | | | 1,20,000 |
| | | | | 2017 மே 1 | இருப்பு கீ/ கொ | | 1,20,000 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

35. **எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.**

- ஒரு நடவடிக்கையில், ரொக்கம் மற்றும் வங்கி என்ற இரு கணக்குகளும் தொடர்பு பெற்றிருந்தால், அந் நடிவடிக்கையின் இரு தன்மைகளும் ரொக்க ஏட்டில் பதியப்படுகின்றன.
- அவ்வாறு ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள், ரொக்க ஏட்டில் பதியப்பட்டால், அது எதிர்ப்பதிவு எனப்படும்.

**உதாரணம்**

1. வங்கியில் பணம் செலுத்தியது :
   - இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் பதியப்படும்.
2. வங்கியிலிருந்து அலுவலக செலவுகளுக்காக பணம் எடுத்தது :
   - இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் பதியப்படும்.

36. **வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.**

1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பும், வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண,
2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய,
3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட,
4. வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுக்க.

37. **தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

1. தேய்வு மற்றும் உராய்வு
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. காலப்போக்கு
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
3. வழக்கொழிவு
   - நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   உதாரணமாக, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது
   - தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.
5. பராமரிப்பின்மை
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

6. அசாதாரணமான காரணிகள்
   - தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

38. **நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.**

- நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.
- இச்செலவின் பயன், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டஆண்டுகளுக்கு கிடைக்கும்.

**உதாரணங்கள்**

1. விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவுத் தொகை
2. பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள்

39.

**2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்ட கணக்கு**

ப வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| வாராக்கடன் க/கு | 1,000 | | | | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | 2,450 | | | | |
| கடனாளிகள் மீதான தள்ளுபடிக/கு | 931 | 4,381 | | | |

**2016, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| | | | பற்பல கடனாளிகள் | 50,000 | |
| | | | கழிக்க : வாராக்கடன் | 1,000 | |
| | | | | 49,000 | |
| | | | கழிக்க : வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5% | 2,450 | |
| | | | | 46,550 | |
| | | | கழிக்க : கடனாளிகள் மீதான தள்ளுபடி 2% | 931 | 45,619 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

40. வரவு இருப்பு மட்டுமே காட்டும் கணக்குகள்

| | |
|---|---|
| 1 | முதல் |
| 2 | விற்பனை |
| 3 | பற்பலகடனீந்தோர் |
| 4 | கொள்முதல் திருப்பம் / வெளித்திருப்பம் |
| 5 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு |
| 6 | பெற்ற வட்டி |
| 7 | பெற்ற கழிவு / ஈட்டிய கழிவு |
| 8 | பெற்ற தள்ளுபடி |
| 9 | பெற்ற கடன் (or) கடன் ( வரவு ) |
| 10 | காப்பு நிதி |
| 11 | வங்கி மேல்வரைப் பற்று |
| 12 | வங்கிக் கடன் |
| 13 | வாராஜயக்கடன் ஒதுக்கு |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ)

ஜெயசீலியின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>( ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 80,000 | 80,000 |
| 2 | வங்கி க / கு ப<br>ரொக்க க / கு<br>( வங்கியில் ரொக்கம் செலுத்தியது ) | | 40,000 | 40,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கக் கொள்முதல் செய்தது ) | | 5,000 | 5,000 |
| 4 | கொள்முதல் க/கு ப<br>லிப்டன் நிறுவனக் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 10,000 | 10,000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 11,000 | 11,000 |
| 6 | சம்பளக் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சம்பளம் வழங்கியது ) | | 5,000 | 5,000 |
| 7 | லிப்டன் நிறுவனக் க/கு ப<br>வங்கி க/கு<br>( காசோலை மூலம் செலுத்தியது ) | | 10,000 | 10,000 |
| 8 | அறைகலன் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 4,000 | 4,000 |
| 9 | மின்கட்டணம் க/கு ப<br>ரொக்க க/கு<br>( மின் கட்டணம் செலுத்தியது ) | | 1,000 | 1000 |
| 10 | காப்பீட்டு முனைமம் க/கு ப<br>வங்கி க/கு<br>( காப்பீட்டு முனைமம் செலுத்தியது ) | | 300 | 300 |



**( அல்லது )**

41. ஆ) எட்வர்டின் ஏடுகளில் 2016, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான

ப வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 89,700 | விற்பனை | 3,56,500 | |
| கொள்முதல் | | 2,56,500 | கழிக்க: உள் திருப்பம் | 2,500 | 3,54,000 |
| நிலக்கரி, எரிவாயு மற்றும் நீர் | | 10,500 | இறுதி சரக்கிருப்பு | | 1,30,000 |
| மொத்த இலாபம் கீ/இ | | 1,27,300 | | | |
| | | 4,84,000 | | | 4,84,000 |
| பயணச் செலவுகள் | | 51,250 | மொத்த இலாபம் கீ/கொ | | 1,27,300 |
| கடன் மீது வட்டி செலுத்தியது | 300 | | முதலீடுகள் மீது வட்டி | | 2,550 |
| கூட்டுக : கொடுபட வேண்டியது ( 20,000 X 6/100X 9/12 ) | 900 | 1,200 | | | |
| பழுது பார்ப்புச் செலவுகள் | | 4,090 | | | |
| நிகர இலாபம் ( முதல் கணக்கிற்கு மாற்றுவது ) | | 73,310 | | | |
| | | 1,29,850 | | | 1,29,850 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**எட்வர்ட் என்பவரின் 2016, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 1,31,500 | | பற்பலகடனாளிகள் | | 60,000 |
| கூட்டுக :நிகர இலாபம் | 73,310 | | சில்லறை ரொக்கம் | | 710 |
| | 2,04,810 | | | | |
| கழிக்க : எடுப்புகள் | 5,000 | 1,99,810 | முதலீடுகள் | | 70,000 |
| கடன் | 20,000 | | இறுதி சரக்கிருப்பு | | 1,30,000 |
| கூட்டுக: கொடுபட வேண்டிய வட்டி | 900 | 20,900 | | | |
| பற்பல கடனீந்தோர் | | 40,000 | | | |
| | | 2,60,710 | | | 2,60,710 |

42. அ)

**கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 அக் 1 | ரொக்க க/கு ப<br>கணேசன் முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 25,000 | 25,000 |
| 5 | வங்கி க / கு ப<br>ரொக்க க/கு<br>(வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 12,500 | 12,500 |
| 10 | அறைகலன் க/கு ப<br>வங்கி க/கு<br>( அறைகலன் வாங்க காசோலை கொடுத்தது ) | | 2,000 | 2,000 |
| 15 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்க கொள்முதல் ) | | 5,000 | 5,000 |
| 19 | வாசு க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடன் விற்பனை ) | | 4,000 | 4,000 |
| 22 | எடுப்புகள் க/கு ப<br>கொள்முதல் க/கு<br>( சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது ) | | 500 | 500 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**பேரேட்டுக் கணக்குகள்**

ப **ரொக்க கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 1 | கணேசன் முதல் க/கு | | 25,000 | 2017 அக் 15 | வங்கி க/கு | | 12,500 |
| | | | | 15 | கொள்முதல் க/கு | | 5,000 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 7,500 |
| | | | 25,000 | | | | 25,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 7,500 | | | | |

ப **கணேசன் முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 அக் 31 | இருப்பு கீ/இ | | 25,000 | 2017 அக் 1 | ரொக்க க/கு | | 25,000 |
| | | | 25,000 | | | | 25,000 |
| | | | | நவ 1 | இருப்பு கீ/ கொ | | 25,000 |

ப **வங்கி கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 5 | ரொக்க க/கு | | 12,500 | 2017 அக் 10 | அறைகலன் க/கு | | 2,000 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 10,500 |
| | | | 12,500 | | | | 12,500 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 10,500 | | | | |

ப **அறைகலன் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 10 | வங்கி க/கு | | 2,000 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 2,000 |
| | | | 2,000 | | | | 2,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 2,000 | | | | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

ப **கொள்முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 15 | ரொக்க க/கு | | 5,000 | 2017 அக் 22 | எடுப்புகள் க/கு | | 500 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 4,500 |
| | | | 5,000 | | | | 5,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 4,500 | | | | |

ப **விற்பனை கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 31 | இருப்பு கீ/ இ | | 4,000 | 2017 அக் 19 | வாசு க/கு | | 4,000 |
| | | | 4,000 | | | | 4,000 |
| | | | | நவ 1 | இருப்புகீ/கொ | | 4,000 |

ப **வாசு கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 19 | விற்பனை க/கு | | 4,000 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 4,000 |
| | | | 4,000 | | | | 4,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 4,000 | | | | |

ப **எடுப்புகள் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 22 | கொள்முதல் க/கு | | 500 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 500 |
| | | | 500 | | | | 500 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 500 | | | | |



( அல்லது )

42. ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) சரக்கு விற்பனைவாயிலாகப் பெற்றது ₹. 75,000. | வருவாயின வரவு |
| (ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹. 2,50,000. | முதலின வரவு |
| (iii) முதலீடு விற்பனைச் செய்தது ₹. 1,20,000. | முதலின வரவு |
| (iv) கழிவுப் பெற்றது ₹. 30,000. | வருவாயின வரவு |
| (v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹. 1,400. | முதலினச் செலவு |

43. அ)

**ராஜேஷ் ஏடுகளில் 31. 3. 2017 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 13,000 | |
| 2 | வங்கி கட்டணம் | | 750 | |
| 3 | பயணச் செலவுகள் | | 350 | |
| 4 | பெற்ற தள்ளுபடி | | | 1,300 |
| 5 | கையிருப்பு ரொக்கம் | | 1,000 | |
| 6 | எடுப்புகள் | | 7,000 | |
| 7 | பற்பல கடனாளிகள் | | 17,100 | |
| 8 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 12,000 |
| 9 | முதல் | | | 25,900 |
| | மொத்தம் | | 39,200 | 39,200 |

( அல்லது )

43. ஆ) **சரிகட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| i) | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப<br>வியாபார க/கு<br>( இறுதிச் சரக்கிருப்பு பதியப்பட்டது ) | | 5,000 | 5,000 |
| ii) | சம்பளம் க / கு ப<br>கொடுபடவேண்டிய சம்பள க /கு<br>( கொடுபடவேண்டிய சம்பளம் ) | | 150 | 150 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| iii) | முன்கூட்டி செலுத்திய காப்பீடு க/கு ப<br>காப்பீடு க/கு<br>( முன்கூட்டி செலுத்திய காப்பீடு ) | | 450 | 450 |
| iv) | பெற்ற கழிவு க/கு ப<br>முன்கூட்டிப் பெற்ற கழிவு க/கு<br>( முன்கூட்டிப் பெற்ற கழிவு ) | | 20,000 | 20,000 |
| v) | கூடியுள்ள வட்டி க/கு ப<br>முதலீடு மீதான வட்டி க/கு<br>( முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ) | | 1,000 | 1,000 |

44. அ

**சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே. ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | **பிரசாத்**<br>100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 450 வீதம் ( 100 × ₹. 450 ) | | | 45,000 | |
| | 75 மீட்டர் வெல்வெட் துணி ஒரு மீட்டர் ₹.180 வீதம் ( 75 × ₹. 180 ) | | | 13,500 | 58,500 |
| 20 | **ஹரிராம்**<br>50 கட்டுகள் காடாத் துணி, கட்டு ஒன்று ₹. 730 வீதம் ( 50 × ₹. 730 ) | | | 36,500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ துணி, கட்டு ஒன்று ₹. 650 வீதம்( 80 × ₹. 650 | | | 52,000 | 88,500 |
| | கொள்முதல் க/கு ப | | | | 1,47,000 |



**சந்தோஷ் ஆடையகத்தின் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெளிச் செல் இடாப்பு எண் | பே. ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 10 | **இரத்தினம்**<br>60 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹.490 வீதம் ( 60 × ₹. 490 ) | | | 29,400 | |
| | 50 மீட்டர் வெல்வெட் துணி, ஒரு மீட்டர் ₹. 210 விதம் ( 50 × ₹. 210 ) | | | 10,500 | 39,900 |
| 18 | **நாதன் நிறுவனம்**<br>100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 510 வீதம் ( 100 × ₹. 510 ) | | | | 51,000 |
| | விற்பனை க/கு வ | | | | 90,900 |

( அல்லது )

44. ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ. எ ண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

45. அ)

2017, மார்ச் 31 ஆம் நாளுக்குரியவங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 300 |
| கூட்டுக: | | |
| விடுத்த காசோலை இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படாதது | | 1,000 |
| | | 1,300 |
| கழிக்க: | | |
| வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 | |
| வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 100 | |
| நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய வாடகை | 200 | 800 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 500 |

( அல்லது )

45. ஆ)

விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லத்து நட்டம் கணக்கிடுதல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| கனரக வாகனத்தின் விலை | 8,00,000 |
| கழிக்க : தேய்மானம் ( 1.10.2014 முதல் 31.3.2015 வரை ) ( 8,00,000 × 15/100 × 6/12 ) | 60,000 |
| | 7,40,000 |
| கழிக்க : தேய்மானம் (1.4.2015 முதல் 31.3.2016 வரை ) ( 7,40,000 × 15/100 ) | 1,11,000 |
| | 6,29,000 |
| கழிக்க : தேய்மானம் ( 1.4.2016 முதல் 31.3.2017 வரை ) ( 6,29,000 × 15/100 ) | 94,350 |
| | 5,34,650 |
| கழிக்க: விற்ற விலை | 5,00,000 |
| விற்றதில் நட்டம் | 34,650 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

46. அ)

திருத்தியப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.பே. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 1) | கொள்முதல் க/கு ப<br>அனாமத்து க/கு<br>( கொள்முதல் ஏட்டில் கூட்டுத் தொகையில் ₹. 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளதை திருத்தியது ) | | 100 | 100 |
| 2) | அளித்த தள்ளுபடி க/கு ப<br>அனாமத்து க/கு<br>(அளித்த தள்ளுபடியின் கூட்டுத்தொகை பேரேட்டில் எடுத்து எழுதப்படாமல் உள்ளதை திருத்தியது ) | | 575 | 575 |
| 3) | அனாமத்து க/கு ப<br>விற்பனை க/கு<br>( விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை எடுத்து எழுதப்பட்டுள்ளதை திருத்தியது) | | 180 | 180 |
| 4) | அனாமத்து க/கு (18,000 - 1,800 ) ப<br>சம்பள க/கு<br>( சம்பளக் கணக்கில் கூடுதல் தொகை எடுத்து பதிவு செய்யப்பட்டதை திருத்தியது ) | | 16,200 | 16,200 |
| 5) | முகிலன் க/கு (1,500 - 1,800) ப<br>அனாமத்து க/கு<br>( முகிலன் கணக்கில் கூடுதல் தொகை பதிவு செய்யப்பட்டதை திருத்தியது ) | | 1,350 | 1,350 |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

46. ஆ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?

1) **ஆயத்த மென்பொருள்**

- இவை வணிக நிறுவனங்கள் வாங்கியவுடன் உபயோகப் படுத்தக்கூடிய தரப்படுத்தப்பட்ட அல்லது ஆயத்த தொகுப்புகள் ஆகும்.
- இந்தத் தொகுப்புகள், சிறிய மற்றும் பாரம்பாரிய வியாபார நிறுவனங்களால் பயன் படுத்தப்படுகின்றன.
- நிறுவுதல் மற்றும் பராமாரிப்பு செலவு மிகக் குறைவு.
- Tally, Busy, Marg மற்றும் Profitbooks என்பவை,இவ்வகையிலான மென்பொருளுக்கு சில உதாரணங்களாகும்.

2) **திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்**

- பலசமயங்களில் ஆயத்தமென்பொருள், வணிக நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருந்துவது சாத்தியமில்லை.
- இச்சூழ்நிலைகளில் திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் வணிக நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தியடைவதற்கு உதவியாக இருக்கின்றன.
- திருத்தியமைக்கப்பட்ட மென்பொருளை வணிகமையத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்கலாம்.

  உதாரணமாக, பணியாளர்களின் வருகையினை பதிவு செய்யும் மென்பொருளை வாடிக்கையாளாரின் தேவைக்கிணங்க, அது பணியாளர்களின் ஒரு மாதத்தின் விடுப்புகளை கணக்கிடவும் செய்திடலாம்.
- இந்தத் தொகுப்புகள் நடுத்தர அல்லது பெரும் வணிக மையங்களால் பயன்படுத்தப் படுகின்றன.

3) **உருவாக்கப்பட்ட மென்பொருள்**

- பெரிய வணிக மையங்கள் தங்களுக்கென்று தனிவழியான செயல்பாட்டைக் கொண்டிருக்கும்.
- பயனுடைய மேலான்மை தகவல் முறைக்கு, சிறிய அல்லது நடுத்தர அளவிலான வணிக மையங்களிலிருந்து தேவைப்படாத, பலதரப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தகவல்கள், பல பயானாளிகளுக்கு அடிக்கடி தேவைப்படுகின்றன.
- அம்மாதிரியான வணிகமையங்களில், அவைகளின் செயல்பாட்டைப் பொருத்து, தேவையின் அடிப்படையிலான மென்பொருளாக, உருவாக்கப்பட்ட தொகுப்புகள் நிறுவப்படுகின்றன.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

47. அ) இராமலிங்கம் என்பவரின் ஏடுகளில்

ப **தனிப்பத்தி ரொக்க ஏடு** வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூலை1 | இருப்பு கீ/கொ | | 32,000 | 2017 ஜூலை | | | |
| 5 | கீர்த்தனா க/கு | | 5,000 | 6 | கட்டுமானச் செலவு க/கு | | 300 |
| 8 | விற்பனை க/கு | | 2,600 | 7 | கொள்முதல் க/கு | | 12,400 |
| 27 | வங்கி க/கு | | 2,000 | 10 | சம்பளம் க/கு | | 7,000 |
| | | | | 11 | பாலா க/கு | | 3,000 |
| | | | | 24 | வங்கி க/கு | | 4,000 |
| | | | | 31 | அலுவலக வாடகை க/கு | | 6,000 |
| | | | | 31 | இருப்பு கீ / இ | | 8,900 |
| | | | 41,600 | | | | 41,600 |
| ஆகஸ்1 | இருப்பு கீ/கொ | | 8,900 | | | | |

( அல்லது )

47. ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| 3. பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| 4. வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 5. | இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| 6. | பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| 7. | நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net